18 03 2024 MONDAY 6.30 PM

## மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தல் பணிகள் தொடர்பாக, தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியப்பிரதா சாஹூ, மாவட்ட ஆட்சியர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.
- தென் மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கான மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் மற்றும் மதிமுக போட்டியிடும் தொகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- அஇஅதிமுக பெயர், கொடி, சின்னத்தை முன்னாள் முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- Wroclaw சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியப்பிரதா சாஹூ, மாவட்ட ஆட்சியர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

காணொலி வாயிலாக மேற்கொண்ட இந்த ஆலோசனையின்போது, தேர்தலை நேர்மையாகவும், அமைதியாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று திரு சத்தியப்பிரதா சாஹூ இக்கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

வேட்புமனு தாக்கலின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் திரு சத்தியப்பிரதா சாஹூ இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

இதற்கிடையே, மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல் முறை வாக்காளர்கள், இந்த தேர்தலில் வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவிகள் - 37 செகண்ட்ஸ்)*

திருப்பூர் மாவட்டத்தில் 64 குழுக்கள் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு கிறிஸ்துராஜ் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - கிறிஸ்துராஜ் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

தென் மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தெலங்கானா, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் தாம் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயணம் குறித்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தற்போது கோயம்புத்தூரில் நடைபெற்றுவரும் சாலை பேரணி நிகழ்ச்சியில் திரு நரேந்திர மோடி பங்கேற்றுள்ளார்.

இரண்டரை கிலோமீட்டர் தொலைவிற்கு நடைபெறவுள்ள இந்த பேரணிக்காக ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள மேடைகளில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலுக்கான திமுக கூட்டணியில் காங்கிரஸ் மற்றும் மதிமுக போட்டியிடும் தொகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி திருவள்ளூர், கடலூர், மயிலாடுதுறை, சிவகங்கை, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கரூர், விருதுநகர், கன்னியாகுமரி மற்றும் புதுச்சேரி காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மதிமுக-விற்கு திருச்சி தொகுதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் இரண்டு தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

நாகை தொகுதியில் திரு வை. செல்வராஜும், திருப்பூர் தொகுதியில் திரு கே சுப்பராயனும் போட்டியிடுகின்றனர்.

மதிமுக-வுக்கு ஒதுக்கப்பட்ட திருச்சி தொகுதியின் வேட்பாளராக திரு துரை வைகோ அறிவிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்து வருவதை தாம் அவ்வப்போது எடுத்துரைத்தும் கூட, திமுக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குறை கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

அஇஅதிமுக-வின் பெயர், கொடி, சின்னத்தை முன்னாள் முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு சத்தீஷ்குமார் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

<<<<<<<>>>>>>

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக பல்முனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற இதுதொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய மத்திய சுகாதாரத்துறையின் கூடுதல் செயலர் Lamchongoi Sweety Changsan, சில பகுதிகளில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துவருவதை சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டு 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதில் 39 பேர் உயிரிழந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு கொசு ஒழிப்புப்பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

பேரிடரால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற இதுதொடர்பான இரண்டு நாள் மாநாட்டில் தொடக்க உரையாற்றிய இந்த ஆணையத்தின் உறுப்பினர் திரு ராஜேந்திர சிங், மத்திய - மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இதில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றார்.

உத்தராகண்டில் சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டது கூட்டு முயற்சிக்கான எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று திரு ராஜேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

உலக பிரசித்தி பெற்ற திருவாரூர் ஆழித்தேர் திருவிழா வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்காக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - ஜெயக்குமார் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திண்டுக்கல் மாவட்டம் ஐயம்பாளையம் பகுதியில் பறக்கும் படை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின்போது காரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

-----------------

நீலகிரி மாவட்டத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 21 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக ஆட்சியர் திருமதி அருணா கூறியுள்ளார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலையொட்டி, அச்சக உரிமையாளர்கள், திருமண மண்டபம் மற்றும் தங்கும் விடுதி உரிமையாளர்கள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திருமதி உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், திருப்பத்தூர் மாவட்டத்தில் மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சியர் திரு தர்பகராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

விருதுநகர் மாவட்டடத்தில் "எனது வாக்கு விற்பனைக்கு அல்ல" என்ற விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை ஆட்சியர் திரு ஜெயசீலன் தொடங்கிவைத்தார்.

----------------

மதுரை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை வாகனங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி இன்று நடைபெற்றது.

-------------

தூத்துக்குடி மாவட்டத்தில் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையின்போது, வேனில் கொண்டுசெல்லப்பட்ட 450 சேலைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

-----------------

ராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கோலப்போட்டி இன்று நடைபெற்றது.

-<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

Wroclaw சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Akhil Sheoren தங்கப்பதக்கத்தையும், நீரஜ் குமார் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 50 மீட்டர் பிரிவில் Ashi Chouksey மற்றும் Shriyanka Sadangi வெள்ளிப்பதக்கத்தை வென்றர்.

மற்றொரு ஆடவர் 50 மீட்டர் பிரிவில் நீரஜ் குமார் வெண்கலப்பதக்கம் வென்றார்.

---------------

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் சர்வதேச துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர் 10 மீட்டர் பிரிவில் இந்தியாவின் Divyansh Singh Panwar தங்கப்பதக்கத்தையும், Rudrankksh வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 10 மீட்டர் பிரிவில் Ramita –வும் தங்கப்பதக்கம் வென்றார்.

----------

சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஆடவர் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Ankur Bhattacharjee –வும், மகளிர் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Divyanshi Bhowmick வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------------

நெதர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isharani Baruah பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், இந்தியாவின் Devika Sihag –ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் Ashwini – Shikha இணை பட்டம் வென்றது.

<<<<<<<END>>>>>>